# பழுப்பு நிற கதவு



ஜோசியா தயாலி

ஜூன் 13

வாரம் 11

தா
ன்
சா
னி
யா




- ✓ இந்த வார ஊழிய அறிக்கை, தான்சானியாவின் கிழக்குக் கடற்கரைக்கு அப்பால் அமைந்துள்ள சான்சிபார் தீவில் முதன்முதலில் மக்கள் எவ்வாறு செவன்த்-டே அட்வென்டிஸ்ட் சபையில் இணைந்தார்கள் என்பதைப் பற்றியது. இந்தச் சம்பவம் 1987 - இல் நடந்தது.
- ✓ அது ஒரு ஓய்வுநாள் காலை வேளை, ஆப்பிரிக்கத் தீவான சான்சிபாரில் அது ஒரு வழக்கமான நாள். அந்தத் தீவின் ஒரே செவன்த் -டே அட்வென்டிஸ்ட் கிளினிக்கின் முதல் மருத்துவரான **ஜோசியா**, ஆலயத்திற்குச் செல்லத் தயாராகிக்கொண்டிருந்தார். அப்போது கிளினிக் கதவு தட்டப்படும் சத்தம் அவருக்குக் கேட்டது.
- ✓ அவர் ஆச்சரியமடைந்தார். பல மாதங்களுக்கு முன்பு அவர் அந்தக் கிளினிக்கிற்கு குடிவந்த நாள் முதல், இதுவரை யாரும் அந்தக் கதவைத் தட்டியதில்லை. அந்தத் தீவில் கதவைத் தட்டும் வழக்கம் மக்களிடத்தில் இல்லை என்பதை அவர் அங்கே தங்கியிருந்த காலத்தில் தெரிந்து கொண்டார். வீட்டிற்குள் இருப்பவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டுமானால், அந்தத் தீவுவாசிகள் 'ஹலோ! ஹலோ!' என்று தான் சத்தமிடுவார்கள். அவர் பிறந்த தான்சானியாவில் மக்கள் கதவைத் தட்டும் வழக்கம் இருந்தது. ஜோசியா கதவருகே நடந்து சென்று, அந்தப் பெரிய பழுப்பு நிறக்கதவைத் திறந்தார்.



- ✓ அந்தப் பகுதியிலேயே அதுபோன்ற ஒரு கதவு அது ஒன்றுதான். வெளியே ஏழு அந்நியர்கள் நின்று கொண்டிருந்தனர் - மூன்று ஆண்கள், ஒரு பெண், ஒரு வாலிபர் மற்றும் இரண்டு குழந்தைகள். “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று அவர் கேட்டார்.
- ✓ நாங்கள் உங்களிடம் பேச வந்திருக்கிறோம்” என்று சொன்னார். “எதைப்பற்றிப் பேசவேண்டும்?” என்று ஜோசியா கேட்டார். டாக்டர் அந்த மக்களை உள்ளே வருமாறு அழைத்தார். அந்த மனிதர் தன்னை மோசஸ் என்றும், மற்றவர்களைத் தனது மனைவி, குழந்தைகள் மற்றும் எசேக்கியேல் என்ற நண்பர் என்றும் அறிமுகப்படுத்தினார்.
- ✓ அதன்பிறகு, அவர் ஒரு விசித்திரமான கதையைச் சொல்லுவதற்குத் தொடங்கினார். மோசஸ் தனக்கு வந்த ஒரு கனவைப்பற்றிப் பகிர்ந்துகொண்டார். அந்தக் கனவில், ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லுமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டது. “அங்கே, ஒரு பெரிய, பழுப்புநிறக் கதவை காண்பாய். அந்தக் கதவைத் தட்டு. அதைத் திறப்பவர்கள் மெயின்லேண்டிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள்; அவர்கள் இந்தத் தீவுக்கு இயேசுவை அறிவிக்க வந்திருக்கிறார்கள். நீ என்ன செய்யவேண்டும் என்று அவர்கள் உனக்குச் சொல்வார்கள்” என்று ஒரு குரல் கூறியது.



- மோசஸ் இந்தக் கனவைக் கண்டு ஆச்சரியப்பட்டார், ஆனால் காலையில் எழுந்ததும் அதை அலட்சியப்படுத்த முடிவுசெய்தார். பிறகு அவருக்கு மீண்டும் அதே கனவு வந்தது. அப்போதும் அவர் அதைத் தவிர்த்தார்.
- மூன்றாவது இரவும் அதே கனவு வந்தபோது, அவர் காலையிலேயே தனது குடும்பத்தினரை அழைத்துக்கொண்டு அந்த கிளினிக்கிற்கு வந்தார். அது ஒரு சனிக்கிழமை அதிகாலை வேளை.
- “இந்த ஊரிலேயே ஒரே ஒரு பெரிய, பழுப்புநிறக் கதவு இதுதான். எனது கனவில் கண்ட அதே கதவு இதுதான் என்று நான் அடையாளம் கண்டுகொண்டேன். இன்று காலை நாங்கள் இங்கே வந்தபோது கதவு பூட்டியிருந்தது. கனவில் கதவைத் தட்டச் சொன்னதால், நான் தட்டினேன்” என்று அவர் ஜோசியாவிடம் கூறினார்.
- ஜோசியா புன்னகைத்தார். மோசஸ் தொடர்ந்தார். “என் கனவில் நான் தேடிக்கொண்டிருந்த நபர் ஒருவேளை நீங்களாகத்தான் இருக்கவேண்டும், நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?” என்று கேட்டார். ஆம் என்பது போல ஜோசியா தலையசைத்தார்.
- “இன்று ஆராதனை நாள், நான் இப்போது அந்த ஆராதனை இடத்திற்குச் செல்லப்போகிறேன், நாமும் சேர்ந்து செல்லலாமா?” என்று அவரிடம் ஜோசியா கேட்டார். மோசஸ் ஒப்புக்கொண்டார்.



- ✓ அந்தக் குழுவினர் சாலைக்கு நடந்துசென்று, ஒரு பேருந்து ஏறி வீட்டுச்சபை ஒன்றிற்குச் சென்றனர். பின்னர், அங்கேயே மதியஉணவு சாப்பிட்டுவிட்டு மீண்டும் பேருந்தில் கிளினிக்கிற்குத் திரும்பினர்.
- ✓ அந்த நாளுக்குப் பிறகு, மோசஸும் அவரது குடும்பத்தினரும் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அந்த வீட்டுச் சபைக்குச் செல்லத் தொடங்கினர். ஜோசியா அவர்களின் வீட்டிற்குச் சென்று அவர்கக்கு வேதாகமப் பாடத்தை நடத்தினார். உண்மையில், **மோசஸ்** ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தான்சானியாவின் நிலப்பகுதியிலிருந்து சான்சிபார் தீவுக்குக் குடிபெயர்ந்த ஒரு கிறிஸ்தவர். அவர் சமீபத்தில் அந்தத் தீவில் ஒரு அட்வென்டிஸ்ட் புத்தக ஊழியரைச் சந்தித்திருந்தார்; அவரும் அவரது நண்பர் எசேக்கியேலும் வேதாகமத்தைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர்.
- ✓ மோசஸ் அந்தப் பெரிய பழுப்பு நிறக் கதவைப்பற்றிய கனவைக் கண்டது அந்தச் சமயத்தில்தான். அதன்பிறகு, ஜோசியா நிலப்பகுதியிலுள்ள ஒரு போதகரைத் தொடர்பு கொண்டு, மோசஸ் மற்றும் எசேக்கியேல் ஆகிய இருவர் ஞானஸ்நானத்திற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். போதகர் ஆச்சரியமடைந்தார். ஏனெனில், சான்சிபாரில் பல ஆண்டுகளாக எவருமே ஞானஸ்நானம் பெறவில்லை.

5



- ✓ சிறிது காலத்திற்குப் பிறகு, போதகர் இந்தியப் பெருங்கடலின் தண்ணீரில் மோசஸ் மற்றும் எசேக்கியேலுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அந்த இரண்டு மனிதர்களும் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணிப்பதைக் கண்டு ஜோசியா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்.
- ✓ அவர் செய்ததெல்லாம் அந்தப் பெரிய, பழுப்பு நிறக் கதவைத் திறந்தது மட்டும்தான். மற்ற அனைத்தையும் தேவனே செய்தார். டாக்டர் ஜோசியா திறந்த அந்தப் பெரிய பழுப்பு நிறக்கதவு, காலப்போக்கில் மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் இன்று, அந்த கிளினிக்கின் இரண்டு பழைய கட்டிடங்களும் முழுமையாக மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளன.
- ✓ இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வார ஓய்வுநாள் காணிக்கை மூலம் நீங்களும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவத்தின் ஒரு அங்கமாக மாறலாம். இந்த நிதி உதவி, பழைய கட்டிடங்களை இடித்து விட்டு, நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு உதவும். இதன்மூலம் சான்சிபார் தீவில் தேவனுடைய குணமாக்கும் ஊழியம் இன்னும் வலுப்பெறும். இந்த முக்கியமான திட்டத்திற்குத் தாராளமாக காணிக்கை வழங்குவதற்கு நன்றி.